**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை:- திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC), குளித்தலை,**

**2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22 ஆம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.06/2024 In O.S.No.226/2019**

A.துரைசாமி .....மனுதாரர்/வாதி

/எதிர்/

1) C.தங்கவேல்

2) T.ராஜம்மாள் .....எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 14.08.2024ம் தேதியன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.C.செல்வகுமார் அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.R.பாலசுப்பிரமணியன் அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## ஆணையுரை

உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை பிரிவு 151-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்

1) மனுதாரர் இவ்வழக்கின் வாதி. இவ்வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கில் மனுதாரர் இ.ம.எண்.829/2019 மனுவை இடைக்கால தடை உத்தரவு கோரி தாக்கல் செய்து எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேற்படி மனு 05.01.2024ல் இடைக்கால தடை உத்தரவு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவு பற்றி எதிர்மனுதாரர்களுக்கு நன்கு தெரியும். மேற்படி உத்தரவிற்கு பின்னிட்டு மனுதாரர் 17.01.2024ல் தாவா சொத்தை சுற்றி வேலி அமைக்க ஏற்பாடு செய்த போது எதிர்மனுதாரர்கள் சட்ட விரோதமாக மனுதாரரை தடுத்து கையில் அருவாள் மற்றும்

ஆயுதங்களுடன் வந்து மனுதாரரை மிரட்டியதாகவும், எதிர்மனுதாரர்கள் நீதிமன்ற உத்தரவை மீறி செயல்பட்டதாகவும், இது குறித்து மனுதாரர் 18.01.2024 ல் குளித்தலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்து காவல்துறையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், காவல்துறையினர் உதவி இல்லாமல் தாவா சொத்தை மனுதாரர்கள் அனுபவிக்க இயலாது என்றும், காவல்துறை உதவி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

## எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்

2) எதிர்மனுதாரர்கள் தங்கள் எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டும். இ.ம.எண்.829/19 ல் இடைக்கால தடை உத்தரவு பெற்றிருப்பது உண்மை. மேற்படி உத்தரவு இவ்வழக்கு முடிவடையும் வரையில் தான் பொருந்தும். இவ்வழக்கின் தீர்ப்புக்கு பின்னிட்டு அந்த உத்தரவு ரத்தாகிவிடும். இந்நிலையில் மேற்படி உத்தரவின் அடிப்படையில் மனுதாரர் தாவா சொத்தின் நிரந்தர அமைப்பான சுற்றுப்புற கல் தூண் வேலி அமைப்பது சட்டத்திற்கு புறம்பானது. 17.01.2024 ல் மனுதாரர் சுற்றுப்புற வேலி அமைக்க முயற்சித்ததாகவும், அப்போது பிரச்சனை ஏற்பட்டதாக கூறியுள்ள சங்கதிகள் பொய்யானது. இ.ம.எண்.829/2019 ல் தாவா சொத்தை அனுபவிப்பதை பிரதிவாதிகள் இடையூறு செய்யக்கூடாது என்று மட்டும் தான் தற்காலிக உறுத்துக்கட்டளை பெறப்பட்டுள்ளது. மனுதாரர்கள் கல் தூண் கொண்டு வேலி அமைத்துக்கொள்ள எந்த உத்தரவும் இல்லை. பொய்யான சங்கதிகளை கூறி மனுதாரர் உத்தரவு பெற முயற்சி செய்து வருகிறார். மனுதாரர் வேலி அமைத்தால் தீர்ப்புக்கு பின்னட்டு அதனை எடுக்க எதிர்மனுதாரர்கள் வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். எனவே வழக்கில் நிரந்தர தீர்வு ஏற்படாமல் வேலி அமைப்பது பல வழக்குகள் ஏற்பட வாய்ப்பாக இருக்கும். தீர்ப்புக்கு பின்னிட்டு வேலி அமைப்பதில் எதிர்மனுதாரர்களுக்கு ஆட்சேபனை இல்லை. சாட்சி விசாரணை இல்லாமல் எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் அனுபவத்தை இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை வைத்துக்கொண்டு மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் நிலைக்கத்தக்கதல்ல. எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**<u>தீர்வு</u>**

3) தற்போது தீர்மானம் செய்யப்படவேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளையானது இ.ம.எண்.829/2019 மனுவில் வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் தாவா சொத்தில் மனுதாரர் வேலி அமைக்க முயற்சித்த போது எதிர்மனுதாரர்கள் பிரச்சனை செய்து மனுதாரரை மிரட்டியதாகவும், எனவே தனக்கு காவல்துறையினர் உதவி தேவைப்படுகிறது என இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர் கல் தூண் அமைத்துவிட்டால் தீர்ப்புக்கு பின்னிட்டு அதை அகற்ற மீண்டும் ஒரு வழக்கு தாக்கல் செய்ய வேண்டுமென்றும், அதனால் மனுதாரர் இவ்வழக்கு முடிவடைந்த பின்னிட்டு கல் தூண் அமைப்பதில் தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும், அவ்வாறு இல்லாமல் வழக்கு நிலுவையில் இருக்கும் போது கல் தூண் அமைக்க அவருக்கு இ.ம.எண்.829/2019 மனுவில் எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை என்றும், எனவே மனுதாரர் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்க இயலாது என ஆட்சேபனை செய்தார்.

5) இ.மஎ.ண்.829/2019 மனுவின் கோப்பினை பரிசீலனை செய்கையில், **"மனு சொத்தில் உள்ள மனுதாரரின் அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்ய முயற்சிப்பதை பார்க்கும்போது சமநோக்கு நிலையானது மனுதாரருக்கு ஆதரவாகவே உள்ளது. மனு சொத்தில் உள்ள மனுதாரரின் அனுபவத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்தால் மனுதாரருக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு ஏற்படும். அந்த இழப்பை எவ்விதத்திலும் ஈடு செய்யமுடியாது. எனவே, நீதியின் நலன் கருதி தாவா அசல் வழக்கு விசாரணை முடியும் வரை மனு சொத்தில் உள்ள மனுதாரரின் அனுபவத்தையும், மனு சொத்தின் கீழ்புற எல்லையில் மனுதாரர் வேலி போடுவதையும் எதிர்மனுதாரர்கள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது"** என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவினை எதிர்த்து எதிர்மனுதாரர்கள்

தரப்பில் எவ்வித மேல்முறையீடும் தாக்கல் செய்ததாக குறிப்பிட்டு கூறவில்லை. மேற்படி உத்தரவினை பரிசீலனை செய்ததில் மனுதாரர் தாவா சொத்தின் கீழ்புற எல்லையில் வேலி போடுவதற்கு எதிர்மனுதாரர்கள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என ஏற்கனவே இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

6) இந்நிலையில் மனுதாரர் வேலி போடுவதை எதிர்மனுதாரர்கள் தடை செய்வது சட்டத்திற்கு புறம்பானதாகும். மேலும் இது குறித்து காவல்துறையினரிடம் மனுதாரர்கள் புகார் கொடுத்தும், காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கவில்லை என மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் ஏற்கனவே இடைக்கால தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ள நிலையில், காவல்துறையினர் மேற்படி உத்தரவினை அனுசரித்து மனுதாரருக்கு பாதுகாப்பு வழங்க வேண்டியது அவசியமாகும். அதை மீறி செயல்படுவது சட்டத்திற்கு புறம்பானதாகும். எனவே மனுதாரர் தாவா சொத்தினை மேற்படி இடைக்கால உத்தரவின் அடிப்படையில் அனுபவம் செய்வதை எதிர்மனுதாரர்கள் தடுக்காத வகையில் காவல்துறையினர் மனுதாரருக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டிய அவசியம் ஆகும். எனவே, இம்மனுவில் கண்டுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்க வேண்டியது என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,**

இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**Sd/-R.தமிழரசி,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**

**குளித்தலை.**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்** - இல்லை

**Sd/-R.தமிழரசி**,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),**

**குளித்தலை.**